# இலக்கியங்களில் பொருளியல் சிந்தனைகள்

***பெ. தினேஷ்***
பதிவு எண்: 23211284021014
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி), பாளையங்கோட்டை
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

***முனைவர் ச. கந்தன்***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி), பாளையங்கோட்டை

**மலர்: 12**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: மே**

**வருடம்: 2025**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v12iS1-May.8985

## முன்னுரை

பண்டமாற்று வணிகத்தில் பல்வேறு தரப்பினரும் ஈடுபட்டு வந்தனர். ஐவகை நிலங்களில் பொருட்கள் உற்பத்தி செய்யும் பணியில் பெண்களின் பங்கும் குறிப்பிடத்தக்கதாக இருந்தது. நெல், மீன், உப்பு, பால், தயிர் போன்ற பொருட்கள் விற்பனையில் பெரும்பாலும் பெண்கள் ஈடுபட்டனர். பண்டமாற்றில் பெண்களின் பங்கு என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறியலாம்.

பண்டமாற்று வணிகத்தில் ஆண்கள் உள்ர் மட்டுமின்றி வெளியுர்களுக்கும் பொருட்களை விற்றுத் தனக்குத் தேவையானப் பொருட்களை வாங்கினர். பெண்கள் வெளிநாட்டு வணிகத்தில் ஈடுபடாவிட்டாலும் உள்ரில் சிறுபொருட்களை விற்கும் பொருட்டு பண்டமாற்று வணிகத்தில் ஈடுபட்டு வந்தனர்.

எந்த இடத்தில் எந்தப் பொருளை விற்றால் அதிக லாபம் கிடைக்கும் என்ற வியாபார நுணுக்கத்தைப் பெண்கள் அறிந்திருந்தனர். இளம் பெண்கள் முதல் வயது முதியவர்கள் வரை அனைத்து பருவத்தினரும் பண்டமாற்று வணிகத்தில் ஈடுபட்டிருந்தனர். பொருட்களைக் கூவி விற்றும் எவ்வளவு பொருள் கொடுத்து அதற்கு எத்தன்மையான பொருட்களை வாங்க வேண்டும் என்பதையும் அவர்கள் அறிந்திருந்தனர்.

ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் பெண்கள் நடந்து சென்றது மட்டுமல்லாது கழுதைகளை ஓட்டியும் சென்றனர். பொருட்களைக் கொண்டு செல்ல அவர்கள் பெரும்பாலும் கழுதைகளைப் பயன்படுத்தினர். கழுதைகளை அடித்து ஓட்டிச் சென்றனர். கடன் சொல்லி கள் குடிப்பவர்கள் கடனை தீர்க்காமல் மீண்டும் வந்து கள் கேட்டால் அவர்களிடம் கண்டிப்பு காட்டுவதிலும் பெண்கள் வல்லவர்களாகத் திகழ்ந்தனர்.

கள்ளினைத் தங்களுடைய வீட்டிலேயே தயாரித்து விற்பனை செய்து வந்தனர். மேலும் தயிர், மோர் போன்ற பொருட்களை விற்று அவை உற்பத்தி செய்ய மூவர் காரணமாக இருந்து பசுக்களை வாங்கினர். இவ்வாறு பண்டமாற்று வணிகம் சிறப்பாக நடைபெற பெண்கள் மிகச் சிறப்புறப் பங்காற்றியுள்ளனர். நாநலம் உடையவர்களாக வணிகப் பெண்கள் இருந்தனர்.

### மகளிர் சிறப்பு

**"நாநல மென்று நலனுடைமை யந்தலம்**
**யாநலத் துள்ளதூ மன்று"**

**(குறள் 641)**

சொல்வன்மை என்று சொல்லப்படும் நாநலம் மற்ற எந்நலத்துள்ளும் அடங்குவது அல்ல. தனிச்சிறப்பு உடையது. வணிகத்தில் நாவன்மை என்பது மிக முக்கியமானது ஆகும். ஏனெனில் சாதுர்யமாகப் பேசி பொருட்கள் வாங்க வைப்பவர்களால் மட்டுமே வணிகத்தைச் சிறப்பாக நடத்த முடியும். சங்க காலப் பெண்கள் தங்களுடைய சொற்சிறப்பால் சிரித்துப் பேசி கூவிவிற்றுப் பண்டமாற்று வணிகத்திற்கு உறுதணை புரிந்தனர்.

### ஆடை

பெண்களின் ஆடை அலங்காரம் இடத்திற்கு இடம் மாறுபட்டு காணப்படும். பண்டமாற்று வணிகத்தில் ஈடுபட்ட பெண்கள் தழையாடையை உடுத்தியுள்ளனர்.

"தழையுடை, பகைத்தாழ, மடிவை, குழை எனப் பல பெயர் பெறும். இவை, பெரும்பான்மையான காட்டுகளில் தழை என்றே சுட்டப்படுகின்றன. தழை என்று குறிப்பிட, மக்கள் தழையுடை என்று புரிந்து கொள்ளுமளவிற்குச் செல்வாக்குடன் திகழ்ந்திருப்பதே இதற்குரிய காரணமாகும். என்று முனைவர் கு. பகவதி தன்னுடைய "தமிழர் ஆடைகள்" என்னும் நூலில் குறிப்பிடுகின்றார்.

தழையுடைகளைப் பற்றிய மற்றுமொரு சிறப்பு, இதன் மெல்லிய இயல்புக் கேற்ப மெல்லியலார் மட்டுமே பயன்படுத்திக் கொண்டமையாகும். ஐந்நில மகளிர்களும் இதனை உடுத்தித் தங்களை வனப்பாக்கிக் கொண்டனர்.

சீவக சிந்தாமணி வேட்டுவ மகளிரின் உடையாக இதனைக் காட்டும்.

**"கொடி முதிர் கிழங்கு தீம் தேன் கொழும்**
**தடி நறவொடு ஏந்தி"**

**(சீவக. 1231)**

"மகளிரிலும் இளைய மகளிரே இதனை உடுத்தினர். முதியோர் தழையுடுத்தியதாகச் சான்று இல்லை. எனவே ஆடை பற்றிய பிற எண்ணங்களிலிருந்தும் இதனை உடுத்தலுக்குப் பஞ்சமன்று: பாசமே காரணம் எனக் கருதுதல் பொருந்தும்".

வணிகத்தில் ஈடுபடும் பெண்கள் அழகிய சுருண்ட கூந்தலையும் அசைந்து அசைந்து நடக்கும் தன்மையும் பெற்றவர்கள்.

**"ஐது அகல் அல்குல் கவின்பெறப் புனைந்த**
**பல்குலைத் தொடலை ஒல்குவியின் ஒல்கி"**

**(அகம், 390, வரி 6-7)**

வளைந்து சுருண்ட கூந்தல் அலைபாய அழகொழுகும் அல்குல் நடந்து, அணிந்த தழையாடை அசைய அசைந்து நடந்து சென்று பொருட்களைப் பண்டமாற்றுச் செய்துள்ளனர் என்பதை இப்பாடல் வரிகள் உணர்த்தி நிற்கின்றன.

மேலும் உமணரது இளைய மகன் கோற்றொழில் அமைந்த ஒளிரும் சிலவகை வளைகள் ஒலிக்க தன் கைகளை வீசிக் கொண்டு நடந்து சென்று பொருட்களை விற்பாள் என்பதையும் அறிந்து கொள்ள முடிகிறது. அண்ணன்கள் பிடித்து வந்த மீனை தழையாடை உடுத்திய தங்கைமார் விற்று வருவர் என்று கூறுவதிலிருந்தும் பண்டமாற்று வணிகத்தில் ஈடுபட்ட பெண்கள் பெரும்பாலும் தழையாடையை உடுத்திக் கொள்வர் என அறிந்து கொள்ள முடிகிறது.

**காலம்**

சங்க காலத்தில் பெண்கள் வணிகத் தொழிலில் ஈடுபட்டிருந்த போதிலும் அனைத்து நேரங்களிலும் பெண்கள் வணிகம் செய்யவில்லை. அதிகாலை வேளைகளில் தான் அதிகமாக வியாபாரம் செய்தனர்.

"முல்லை நிலப் பெண்களின் பணப் பகிர்வானது உணவு சார் தொழில்களாக அமைகின்றன. தங்களின் குடியிருப்புக்குள் இவர்களின் பணியிடம் அமைகின்றது. இருப்பினும் மோர், தயிர், வெண்ணெய், நெய் உள்ளிட்டனவற்றைப் பெண்கள் வெளியிடங்களில் விற்பனை செய்துள்ளனர். பிற நிலங்களிலிருந்து முல்லை நிலப் பெண்களை தனித்துவப் படுத்துகின்றது. பொருளாதாரத்திலும், தொழிலிலும், பண்டமாற்றிலும் நேரிடையாகப் பெண்கள் பங்கேற்பதை முல்லை நிலத்தில் தான் காண முடிகின்றன. இதன்வழி பெண்கள் சுதந்திரம் பெற்றவர்களாக இருந்ததை உய்த்துணரலாம்".

மீன், பால், நெய் போன்ற உணவுப் பொருட்களை விற்கும் பெண்கள் அதிகாலை நேரத்தையே தேர்ந்தெடுத்தனர். விடியற்காலையில் பெண்கள் மீனை விற்று அணிகலன்களைப் பெற்றாள் என்று பின்வரும் அகநானூற்றுப் பாடல் குறிப்பிடுகிறது.

**"காலைத் தந்த கணைக் கோட்டு வாளைக்கு**
**அவ்வாங்கு உந்தி அம்சொல் பாண்மகள்**
**நெடுங்கொடி நுடங்கும் நறவுமலி மறுகும்**
**பழஞ்செந் நெல்லின் முகவை கொள்ளாள்**
**கழங்கு உறழ் முத்தமொரு நன்கலம் பெறுஉம்"**
**(அகம். 126, வரி. 8-12)**

மேலும் அதிகாலையில் பெண்கள் பாலைக்கடைந்துதயிராக்கி வெண்ணெயை எடுத்தப் பின்னர் மோர் பானையை ஏந்திச் சென்று விற்கிறார்கள்.

கள் விற்கும் பெண்களும் அதிகாலை நேரத்தையே பயன்படுத்தினர். ஏனெனில் போருக்குச் செல்லும்படை வீரர்கள் போருக்குச் செல்லுமுன் கள்ளுண்டு கொடிய பாலைநிலம் வழியாகச் சென்றதாக அகநானூற்றுப் பாடலொன்று குறிப்பிடுகின்றது. இதிலிருந்து பெண்கள் தங்கள் வணிகத் தொழிலை சிறப்பாகச் செய்ய அதிகாலை நேரத்தைத் தேர்ந்தெடுத்துப் பயன் படுத்தியுள்ளமையை அறிந்து கொள்ள முடிகிறது.

**முதுமகளிர்**

முதுமகளிர் மக்கள் விரும்பி வாங்கும் பொருட்களை வீடு வீடாக கொண்டு சென்று விற்று வருவர்.

**"நன்னர் நலத்தர் தொல்முது பெண்டிர்**
**செந்நீரப் பசும்பொன் புனைந்த பாவை**
**செல் சுடர்ப் பசுவெயில் தோன்றியன்ன**
**செய்யர் செயிர்த்த நோக்கினர் மடக்கண்**
**ஐஇய கலுழும் மாமையர் வை எயிற்று**
**வார்ந்த வாயர் வணங்கு இறைப்பணைத் தோள்**
**சோர்ந்து உகுவன்ன வயக்குறு விந்திகை**
**தொய்யில் பொறித்த சுணங்கு எதிர் இளமுலை**
**மை உக்கன்ன மொய் இருங் கூந்தல்**
**மயில் இயலோரும் மடமொழியோரும்**
**கைஇ மெல்லிதின் ஒதுங்கி கைஎறிந்துக்**
**கல்லா மாந்தரொரு நகுவனர் திளைப்ப**
**புடை அமை பொலிந்த வகை அமை செப்பில்**
**காமர் உருவின் தாம் வேண்டு பண்ணியம்**
**கமழ் நறும்பு வொடு மனைமனை கூறுக"**
**(மதுரைக் 409-423)**

கரிய கடலில் தோன்றும் வெள்ளிய சங்கு போன்ற கோதிப் பின்னே முடித்து விடப்பட்ட வெள்ளிய நீண்ட நரை மயிரினையுடைய மூத்த பெண்டிர் நன்றாகிய வனப் பினைவுடையவராய் சிவந்த நீர்மையையுடைய கிளிச் சிறை என்னும் பொன்னால் செய்த மாலைக் கதிர்கள் பட்டு இளவெயிலில் தோன்றினாற் போலச் சிவந்த நிறத்தையுடையவராய் வியப்பினால் நோக்கினார். கலங்குவதற்குக் காரணமாகிய மாமை நிறம் உடையவராய்

நேராக அமைந்த கூர்மையான எயிறினைக் கொண்ட வாயினையுடையவராய் வளைந்த சந்திரனையுடைய மூங்கில் போன்ற தோளினையும் விளக்கமுடைய கைவந்திகை என்னும் அணிகலனையும் "தொய்வினால் வல்லியமாக எழுதப்பட்ட "கோலம் நெகிழ்ந்து சிந்துவது போன்ற சுணங்கு தோன்றிய செறிந்த கருமயிரையும் உடைய மயிரின் தன்மையுடைவர்களும் மடப்பத்தையுடைய மொழியை உடையவர்களும் நம்மைப் கோலம் செய்து கொண்டு வீதிகளில் மெத்தென நடந்து அவ்வழிச் செல்லும் இளையவர்களைக் கையைத் தட்டி அழைப்பர். காம நுகர்ச்சியின்றி வேறொன்றையும் அறியாத இளையருடன் இம்மகளிர் மகிழ்ந்தனராயப் புணரும் படி பக்கம் திரண்டும் பொலிவு பெறவும் உருவாக்கப்பட்ட பலவகையான செப்புகளில் விருப்பம் மருவிய வடிவுடைய ஆடவரும், பெண்டிரும் தாம் விரும்பியவாறே நுகர்வதற்காக நுகர்பொருளை முதுபெண்டிர் மணம் மிகக் கமழும் புக்களுடன் ஏந்தியவர்களாய் மனைகள் தோறும் நிற்பர்.

## இளமகளிர்

இளமகளிர் பண்டமாற்று வணிகத்தில் அதிகமாக ஈடுபட்டிருந்தனர். கூரிய பற்களையுடைய பாணர்குடிப்பெண் கெடிற்றுமீனைப் கொடுத்துப் பெரும்பயறை வாங்கினாள் என்று ஐங்குறு நூற்றுப்பாடல் ஒன்று குறிப்பிடுகின்றது.

> **"முள் எயிற்றுப் பாண்மகள் இன் கெடிறு சொரிந்த**
> **அகன் பெரு வட்டி நிறைய மனையோள்**
> **அரிகாற் பெரும் பயறு நிறைக்குமு ஊர**
> **மாண் இழை ஆயம் அறியும்-நின்**
> **பாணன் போலப் பல பொய்த்தல்லே"**
>
> ***(ஐங்குறு 47, வரி 1-5)***

என்பது அப்பாடல் சங்க இலக்கியத்தில் மேலும் பல்வேறு பாடல்கள் இளம் பெண்கள் பண்டமாற்று வணிகத்தில் ஈடுபடுவதைக் குறிப்பிடுகின்றது.

## தொகுப்புரை

பண்டமாற்று வணிகத்தில் பெண்களும் தங்கள் பங்களிப்பைச் செவ்வனே ஆற்றியுள்ளனர். எவருக்குக் கடன் கொடுக்க வேண்டும் என்பதையும் கொடுத்த கடனைக் கண்டிப்புக் காட்டி திரும்ப வாங்கும் திறனையும் பெண்கள் பெற்றிருந்தனர். பால், மோர் ஆகியவற்றை விற்று பெரும் செல்வம் சேர்க்காமல் வணிகத்திலும் சிறந்தவர்களாக பெண்கள் விளங்குகின்றனர் என்பதை இக்கட்டுரையின் வழி அறிய முடிகிறது.